## ஒரு பார்வை - பகுதி 1

இந்தப் பிரிவு அனாதைகளை நியாயமாக நடத்துவதை வலியுறுத்துவது பற்றி ஆரம்பிக்கிறது. பெண்களின் உரிமைகள், சொத்தில் அவர்களுக்குரிய பங்கு, திருமணத்தின் போது மஹர் பெறும் உரிமைகள் மற்றும் பெண்களை இழிவாக கருதுவதைத் தடை செய்தல் போன்ற சட்டங்கள் கூறப்பட்டுள்ளன. திருமணம் தொடர்பான சட்டங்கள் தெளிவாக கொடுக்கப்பட்டுள்ளன.

## தராவிஹ் - 4: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 4, அன்னிஸா; வசனம்: 1 - 25; பிரிவு: 1 - 4

1. மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் இவ்விருவரிலிருந்தும், அநேக ஆண்களையும், பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 1)

2. நீங்கள் அநாதைகளின் பொருட்களை அவர்களுக்குக் கொடுத்து விடுங்கள். அவர்களை ஏமாற்றி விடாதீர்கள். அது பெரும் பாவமாகும். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 1)

3. ஆண்கள், நான்கு பெண்கள் வரை மணந்து கொள்ளலாம். அவ்வாறு செய்யும் போது, எல்லா மனைவியரிடமும் நீதமாக நடந்து கொள்ள வேண்டும். இல்லையெனில், ஒரு பெண்ணையே மணம் முடித்துக் கொள்ளுங்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 1)

4. நீங்கள் பெண்களுக்கு அவர்களுடைய மஹரை கொடுத்து மணம் முடிக்கவும். அதை அவர்கள் உங்களுக்கு

விட்டுவிட்டால், அதனை நீங்கள் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கலாம். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 1)

5. ஆண், பெண் இருவருக்கும் சொத்துக்களில் பங்கு உண்டு. வாரிசு உரிமைப்படி, ஆணுக்கு இரு மடங்கும், பெண்ணுக்கு ஒரு மடங்கும் பங்கு உண்டு. (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 2)

6. எல்லா உறவுகளான குழந்தைகள், பெற்றோர்கள், சகோதரர், சகோதரி, விதவை, மனைவியை இழந்த ஆண் ஆகியோருக்கு வாரிசு உரிமை சட்டம் வகுக்கப்பட்டுள்ளது. எந்த சொத்துக்களையும் பிரிக்கும் முன்பு, சம்பந்தப்பட்ட நபரின் கடன்கள் ஏதும் இருப்பின், அதனை அடைத்த பிறகே பிரிக்க வேண்டும். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 2)

7. எந்த ஒரு பெண்ணையும் அவளுடைய விருப்பமின்றி, பலவந்தமாக மணப்பது உங்களுக்கு ஆகுமானதல்ல. (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 3)

8. யார், யாரை மணக்கலாம் என திருமண சட்டம் வசனம் 22 முதல் 23 வரை தெளிவாக கூறப்பட்டுள்ளது. (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 4)

9. உங்களில் எவருக்கு சுதந்திரமுள்ள முஸ்லிம் பெண்களை திருமணம் செய்து கொள்ள சக்தி இல்லையோ, அவர் விசுவாசமுள்ள அடிமைப் பெண்களை திருமணம் செய்து கொள்ளலாம். அல்லாஹ் உங்கள் ஈமானை நன்கு அறிந்தவன். உங்களில் ஒருவர் மற்றொருவரிலிருந்து தோன்றியவர்தான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 4)

## ஒரு பார்வை - பகுதி 2

ஹலாலான வழிகளில் செல்வம் சம்பாதிக்கவும், கொலை அல்லது தற்கொலைச் செயல்களை ஒருபோதும் செய்ய வேண்டாம் என்றும் விசுவாசிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. ஆண்கள் பெண்களை நிர்வகிப்போர் ஆவர். அவர்கள் தங்களுடைய செல்வத்திலிருந்து பெண்களுக்காக செலவிட வேண்டும். நல்லொழுக்கமுடைய பெண்கள் தங்கள் கணவன்மார்களிடம் விசுவாசமாகவும், பணிந்தும் நடப்பார்கள். கணவன்மார்களின் கண்ணியத்தையும் பாதுகாத்துக் கொள்வார்கள். தண்ணீரை பெறாவிடின், சுத்தமான மண்ணைத் தொட்டு "தயம்மும்" செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

## தராவிஹ் - 4: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 4, அன்னிஸா; வசனம்: 26 - 59; பிரிவு: 5 - 8

1. விசுவாசிகளே! உங்களில் ஒருவர் மற்றவரின் பொருள்களைத் தவறான முறையில் எடுத்துக் கொள்ள வேண்டாம். உங்களுக்குள் சம்மதத்தின் பேரில், வர்த்தக முறையை மேற்கொள்ளுங்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 5)

2. நீங்கள் உங்களையே கொலைசெய்து கொள்ளாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்களிடம் மிக்க கருணையுடையவனாக இருக்கின்றான். எவரேனும், வரம்பை மீறி அக்கிரமமாக இவ்வாறு செய்தால், நாம் அவரை நரகத்தில் சேர்த்து விடுவோம். உங்களுக்கு விலக்கப்பட்ட பெரும்பாவமான காரியங்களிலிருந்து நீங்கள் விலகிக் கொண்டால், உங்களின் சிறிய பாவங்களை மன்னித்து அல்லாஹ் உங்களை கண்ணியப்படுத்துவான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 5)

3. ஆண்கள் பெண்களை நிர்வகிப்போர் ஆவர். இதற்குக் காரணம் அல்லாஹ் அவர்களில் சிலருக்குச் சிலரைவிட உயர்வை அளித்திருக்கின்றான் என்பதும், ஆண்கள் தங்களுடைய செல்வத்திலிருந்து பெண்களுக்காக செலவு செய்கிறார்கள் என்பதுமாகும். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 6)

4. எனவே நல்லொழுக்கமுடைய பெண்கள் (தங்கள் கணவன்மார்களிடம்) விசுவாசமாகவும், பணிந்தும் நடப்பார்கள். அவர்களது பொருளைகளையும் கண்ணியத்தையும் பாதுகாத்துக் கொள்வார்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 6)

5. கணவன், மனைவிக்கு இடையே பிரச்சனை ஏற்பட்டால், கணவனின் உறவினர்களிலிருந்து ஒருவரையும், மனைவியின் உறவினர்களிலிருந்து ஒருவரையும் மத்தியஸ்தர்களாக ஏற்படுத்துங்கள். அவ்விருவரும் சமாதானத்தை விரும்பினால், அல்லாஹ் அவ்விருவரிடையே ஒற்றுமை ஏற்படும்படி செய்துவிடுவான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 6)

6. நிச்சயமாக அல்லாஹ் ஒரு அணுஅளவும் அநியாயம் செய்வதில்லை. ஆயினும் ஒரு அணுஅளவு நன்மை இருந்தால்கூட, அதனை அவன் இரட்டித்துத் தன் அருளை கொண்டு மகத்தான கூலியைக் கொடுக்கிறான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 6)

7. நீங்கள் நோயாளியாகவோ, பயணத்திலோ, மலஜலம் கழித்தோ, பெண்களைத் தீண்டியோ இருந்து (சுத்தம் செய்து கொள்ள) தண்ணீரை பெறாவிடின், சுத்தமான மண்ணைத் தொட்டு “தயம்மும்” செய்து கொள்ளுங்கள். (இதன் பின் தொழலாம்). (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 7)

8. அமானிதப் பொருட்களை அதன் சொந்தக்காரர்களிடம் நீங்கள் கொடுத்து விடுங்கள். நீங்கள் தீர்ப்பு கூறினால், நீதமாகவே தீர்ப்பளியுங்கள். அல்லாஹ் கூறும் இவ்வுபதேசம் எவ்வளவு சிறந்தது! (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 8)

## ஒரு பார்வை - பகுதி 3

நயவஞ்சகர்கள் விசுவாசிகளைப்போல நடிக்கிறார்கள். ஆனால் அல்லாஹ்வுக்கும், அவனது நபிக்கும் உண்மையாக அடிபணிய மாட்டார்கள். ஆனால், உண்மையான விசுவாசிகள், நபியின் வேதத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு, நல்லது கெட்டது, அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து வந்தவை என்பதை அங்கீகரிக்கிறார்கள். ஒவ்வொருவரும் அவரவர் செயல்களுக்கு பொறுப்புடையவர்கள். நன்மையைப் பின்பற்றுபவர்கள் நல்லவற்றிலும், தீமையைப் பின்பற்றுபவர்கள் அதன் சுமைகளிலும் பங்கு கொள்வார்கள்.

## தராவிஹ் - 4: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 4, அன்னிஸா; வசனம்: 60 - 87; பிரிவு: 9 - 11

1. நயவஞ்சகர்களை அல்லாஹ்வின் வேதத்தின்பால் அழைத்தால், அவர்கள் நபியை விட்டு விலகி இருப்பதையே காண்கின்றோம். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 9)

2. ஆனால் அவர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படும் சமயத்தில், நபியிடம் வந்து நன்மையையும், ஒற்றுமையையுமே விரும்புகிறோம் என அல்லாஹ்வின் பெயரால் சத்தியம் செய்கின்றனர். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 9)

3. அத்தகையோர் தங்களுக்குள் ஏற்பட்ட சச்சரவில், நபியை நீதிபதியாக அங்கீகரித்து, அவர் வழங்கும் தீர்ப்பை முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளாதவரையில், அவர்கள் உண்மை விசுவாசிகளாக மாட்டார்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 9)

4. எவர்கள் உண்மையாக அல்லாஹ்வை வழிபட்டு, அவனுடைய தூதரை பின்பற்றுகிறார்களோ, அவர்கள் அல்லாஹ்வின் அருளைப் பெற்ற நபிமார்கள், சத்தியவான்கள்,

மார்க்கப்போரில் உயிர்நீத்த தியாகிகள், நல்லொழுக்கம் உடையவர்கள் முதலியவர்களுடன் மறுமையில் வசிப்பார்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 9)

5. சில மக்கள், அல்லாஹ்வின் மீது வலிமையான நம்பிக்கை இல்லாமல், போருக்கு செல்லாமல் தவிர்த்து வருகின்றனர். அவர்கள் எந்த கோட்டைக்குள் பாதுகாப்பாக இருந்தாலும், மரணம் வந்தால் அவர்களது உயிர் போகும். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 11)

6. உறுதியான நம்பிக்கை இல்லாதவர்களுக்கு ஏதேனும் ஒரு நன்மை ஏற்பட்டால், "இது அல்லாஹ்விடமிருந்து கிடைத்தது" என்று கூறுகிறார்கள். ஆனால், அவர்களுக்கு ஏதாவது தீங்கு ஏற்பட்டாலோ, "இது நபி (ஸல்) இடம் இருந்துதான் ஏற்பட்டது" என்று கூறுகிறார்கள். நபியே! அவர்களிடம் கூறும்: "எல்லாம் அல்லாஹ்விடமிருந்தே வந்திருக்கின்றன. எந்த ஒரு விஷயத்தையும் அவர்களுக்கு விளங்கிக் கொள்ள முடியவில்லையே!" (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 11)

7. உனக்கு யாதொரு நன்மை ஏற்பட்டால், அது அல்லாஹ்வினால் ஏற்பட்டது. உனக்கு யாதொரு தீங்கு ஏற்பட்டால், அது உன் வினையால்தான் வந்தது. (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 11)

8. அல்லாஹ்வுடைய கிருபையும், அவனுடைய அருளும், குர்ஆன் மற்றும் நபி (ஸல்) மூலம் அற்புத பரிசாக கிடைத்தது. இல்லாவிட்டால், மக்களில் சிலரைத் தவிர மற்றவர்கள் ஷைத்தானையே பின்பற்றியிருப்பார்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 11)

9. எவரேனும் யாதொரு நன்மையான காரியத்திற்கு சிபாரிசு செய்தால், அதில் ஒரு பாகம் அவருக்கு உண்டு. யாதொரு தீய விஷயத்திற்கு சிபாரிசு செய்தால், அதிலேயும் அவருக்கு ஒரு பங்கு உண்டு. அல்லாஹ் யாவற்றையும் முறைப்படி கவனிப்பவனாக இருக்கிறான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 11)

10. யாரும் உங்களுக்கு ‘ஸலாம்’ கூறினால், அதைவிட அழகான முறையில் பதிலுக்கு ‘ஸலாமை’ கூறுங்கள். அல்லது அதனையே திருப்பிக் கூறுங்கள். நிச்சயமாக அல்லாஹ், யாவற்றையும் கணக்கெடுப்பவனாக இருக்கிறான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 11)

## ஒரு பார்வை - பகுதி 4

நயவஞ்சகர்கள் முஃமின்களை நிராகரிப்போராக ஆக்க விரும்புகிறார்கள். அவர்கள் திருந்தி, அல்லாஹ்வின் பாதையில் வரும்வரை அத்தகையோரை நண்பர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டாம் என அல்லாஹ் எச்சரிக்கிறான். பிறரை அநியாயமாக கொலை செய்பவர்கள் அல்லது குற்றம் சாட்டுபவர்கள் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும். குறித்த நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுவது கடமையாக்கப்பட்டுள்ளது. தொழுகையின் சில விதிகளும் கூறப்பட்டுள்ளது.

## தராவிஹ் - 4: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 4, அன்னிஸா; வசனம்: 88 - 112; பிரிவு: 12 - 16

1. நயவஞ்சகர்கள் உங்களை நிராகரிப்போராக ஆக்க விரும்புகிறார்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 12)

2. அவர்கள் அல்லாஹ்வின் பாதையில் வரும்வரை அத்தகையோரை நண்பர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டாம். அவர்கள் உங்களுடன் போரிட்டால், நீங்கள் எதிர்த்து போரிடுங்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 12)

3. ஒரு விசுவாசி, வேறொரு விசுவாசியை தவறுதலாக கொன்று விட்டால், ஒரு அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அத்துடன் இறந்தவரின் வாரிசுக்கு அவர்கள் தாமாக விட்டாலன்றி, நஷ்டஈடு கொடுக்க வேண்டும். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 13)

4. யார் வேண்டுமென்றே விசுவாசியை கொலை செய்தாரோ, அவருக்கு நரகத்தில் தண்டனை உண்டு. அவர் நரகத்திலேயே நிரந்தரமாக இருப்பார். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 13)

5. அல்லாஹ்வுடைய பாதையில் (போருக்கு) நீங்கள் சென்றால், (போர் முனையில் உங்களை எதிர்த்துச் சண்டை செய்வோர் முஃமின்களா அல்லது மற்றவர்களா என்பதைத்) தெளிவாக அறிந்து கொள்ளுங்கள். யாரையும் விசுவாசி இல்லை என தீர்மானிக்கும் முன், தீர விசாரித்து அவ்வாறு முடிவு செய்யவும். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 13)

6. யார் அல்லாஹ்வின் பாதையில், தான் இருந்த இடத்தை விட்டு வெளியேறி விடுகின்றாரோ, அவர் பூமியில் வசதியான அநேக இடங்களையும், வசதியையும் அடைவர். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 14)

7. நீங்கள் பிரயாணத்தின் போது தொழுகையை சுருக்கிக் கொள்ளுங்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 15)

8. நீங்கள் தொழுகையை முடித்துக் கொண்டால், நின்ற நிலையிலும், இருந்த இருப்பிலும், படுத்திருக்கும் நிலையிலும் அல்லாஹ்வை திக்ரு செய்யுங்கள். மற்ற பாதுகாப்பான நேரங்களில், முறையான தொழுகையை தொழுது கொள்ளவும். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 15)

9. நிச்சயமாக குறிப்பிட்ட நேரங்களில் தொழுகையை நிறைவேற்றுவது முஃமின்களுக்கு கடமையாக்கப் பெற்றுள்ளது. (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 15)

10. ஏதேனும் தவறுகள் ஏற்பட்டால், நீங்கள் அல்லாஹ்விடம் மன்னிப்பைக் கோரும். நிச்சயமாக அல்லாஹ், மிக்க பிழை பொறுப்போனும், அன்புடையோனுமாக இருக்கிறான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 16)

11. எவரேனும் பாவம் செய்து, அதனை மறைத்து, மற்றவர் மீது பழி சுமத்தினால் நிச்சயமாக அவன் அபாண்டமான பொய்யையும், பகிரங்கமான பாவத்தையுமே சுமந்து கொள்கிறான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 16)

## ஒரு பார்வை - பகுதி 5

**தர்மத்தை பற்றியும், நன்மை மற்றும் சமாதானம் பற்றி பேசி, அல்லாஹ்வின் அருளை நாடி ரகசியம் பேசினால் அது நன்மை பயக்கும். நிச்சயமாக அல்லாஹ், தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவே மாட்டான். விசுவாசிகள் நீதிக்காக உறுதியாக நிற்கவும், ஷைத்தானின் வஞ்சகங்களைத் தவிர்க்கவும் அறிவுறுத்தப் படுகிறார்கள். உண்மையாக பாவமன்னிப்பு கேட்டு, அல்லாஹ்வின் கட்டளையைப் பின்பற்றுபவர்களுக்கு வெகுமதி கிடைக்கும்.**

## தராவிஹ் - 4: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 4, அன்னிஸா; வசனம்: 113 - 147; பிரிவு: 17 - 20

1. **நபியே! அவர்கள் பேசும் ரகசியங்களில் பெரும்பாலானவற்றில் யாதொரு நன்மையுமில்லை. ஆயினும், தர்மத்தை பற்றியும், நன்மை மற்றும் சமாதானம் பற்றி பேசி, அல்லாஹ்வின் அருளை நாடி இவ்வாறு ரகசியம் பேசினால், நாம் அவர்களுக்கு மகத்தான நற்கூலி தருவோம். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 17)**

2. **நிச்சயமாக அல்லாஹ், தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவே மாட்டான். மற்ற பாவங்களை அவன் நாடினால் மன்னித்துவிடுவான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 17)**

3. **அல்லாஹ்வை தவிர்த்து, அவர்கள் அழைப்பவை எல்லாம் பெண் தெய்வங்கள் என்று அவர்கள் கூறும் சிலைகளை அன்றி வேறில்லை. அவர்கள் அழைப்பது ஷைத்தானை தவிர, வேறு யாரையும் அல்ல. (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 18)**

4. **ஷைத்தான் மக்களை வழி கெடுக்க முனைவான். அவன் அவர்களுக்கு வீண் நம்பிக்கைகளை உண்டுபண்ணி, ஆடு மாடுகளின் காதுகளை அறுக்கும்படியும், அல்லாஹ்வின்**

படைப்புகளை வேறுபடுத்தும்படியும் செய்வான். எவர் அல்லாஹ்வை அன்றி ஷைத்தானை பாதுகாவலனாக எடுத்துக் கொள்கிறாரோ, அவர் நிச்சயமாக நஷ்டத்தை அடைவார். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 18)

5. ஷைத்தானின் வாக்குறுதிகள் பொய் நம்பிக்கை ஊட்டுகிறது. அது ஏமாற்றம் அன்றி வேறு ஏதும் இல்லை. (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 18)

6. எவர் அல்லாஹ்விற்கு முற்றிலும் வழிபட்டு, நன்மை செய்து இப்ராஹீம் (அலை) உடைய நேரான மார்க்கத்தை பின்பற்றுகிறாரோ, அவருக்கு சுபிட்சம் உண்டு. அல்லாஹ், இப்ராஹீம் (அலை) அவர்களை தன்னுடைய உண்மை நண்பனாக எடுத்துக் கொண்டிருக்கிறான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 18)

7. இந்த சந்தர்ப்பத்தில் ஏதும் பொருள் கொடுக்கும்படி நேரிட்டால், கொடுத்து விடவும். பொதுவாக மனித மனம் கஞ்சத்தனத்திற்கு உட்பட்டு விடுகிறது. ஆனாலும் கஞ்சத்தனம் படாமல், ஒவ்வொருவரும் மற்றவருக்கு உபகாரம் பண்ணவும். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 19)

8. விசுவாசிகளே! இம்மையின் பலனை மட்டும் எவன் விரும்புவான்? அல்லாஹ்விடத்திலோ இம்மை மற்றும் மறுமையுடைய பலன்கள் இருக்கின்றன. (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 19)

9. நீங்கள் நீதியின் மீதே உறுதியாக இருங்கள். அது உங்களுக்கோ, உங்கள் தாய், தந்தைக்கோ மற்றும் உறவினர்களுக்கோ விரோதமாக இருந்தபோதிலும், அல்லாஹ்விற்காக சாட்சி கூறுபவர்களாக இருங்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 20)

10. அல்லாஹ் கட்டளையிடுகிறான்: அல்லாஹ்வுடைய வேதத்தை நிராகரிப்பதையோ அல்லது பரிகசிப்பதையோ நீங்கள் செவியுற்றால், அவர்கள் இதனை தவிர்த்து வேறு விஷயத்தில் செல்லும்வரையில் நீங்கள் அவர்களுடன் இருக்க வேண்டாம்.

அவ்வாறு இருந்தால், நீங்களும் அவர்களைப் போன்றுதான் ஆவீர்கள். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 20)

11. நிச்சயமாக இந்நயவஞ்சகர்கள் நரகத்தின் மிகவும் கீழான அடித் தளத்தில்தான் இருப்பார்கள். அவர்களுக்கு உதவி செய்ய யாரும் கிடையாது. (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 21)

12. ஆயினும், யார் மன்னிப்புக் கேட்டு திருந்தி, அல்லாஹ்வை (தம் நற்செய்கைகள் மூலம்) கெட்டியாகப் பிடித்து, தங்களுடைய சன்மார்க்கத்தை அல்லாஹ்வுக்காகத் தூய்மையாக்கியும் கொண்டார்களோ அவர்கள் முஃமின்களுடன் இருப்பார்கள். மேலும் அல்லாஹ் முஃமின்களுக்கு மகத்தான நற்கூலியை அளிப்பான். (ஸூரா - அன்னிஸா; பிரிவு: 21)

-----------------------------------------